1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு ஓரளவுக்குக் குறைபாடு இருந்தது. இப்பொழுது ஓரளவு ஆசிரியர்கள் இல்லையென்ற குறைபாடு இல்லை. இப்பொழுது பொதுவாக, பி.காம்., எம்.காம். ஆகியவைகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்ற ஆலோசனையைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு அளித்திருக்கிறது. இவ் வகுப்புகளை நடத்தச் செலவு அதிகமில்லை. ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற செலவுகள் இல்லை. இப்பொழுது பி.காம்., எம்.காம். படிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், எந்த எந்தக் கல்லூரிகளில் போதுமான இட வசதி இருக்கிறதோ, அக்கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை பல்கலைக் கழகத்திற்குத் தந்திருக்கிறோம். சென்ற 2 ஆண்டுகளாக, எம். காம்., பி. காம்., வகுப்புகள் நடத்த அனுமதி தருவதிலே பல்கலைக் கழகம் மிகுந்த தாராள மனப்பான்மையோடு நடந்து வருகிறது.

வாணியம்பாடியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

*103 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடித் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி/கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கருகில் விளையாட்டுத் திடல்.

*104 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதிக்கு அருகில் ஒரு நீச்சல் குளமும் (Swimming Pool) டென்னிஸ், வாலிபால், கால்பந்து போன்ற விளையாட்டுகளுக்கான வசதிகளும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அவை எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியின் அருகில் பூப்பந்து (Bad minton) கைப்பந்து (Volley Ball) விளையாட்டுக்களுக்கான வசதிகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்சமயம் நீச்சல் குளமும் (Swimming Pool) டென்னிஸ், கால்பந்து (Foot Ball) விளையாட்டுகளுக்கான வசதிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(இ) எழவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, நீச்சல் குளம் இல்லையென்றாலும்கூட, இப்பொழுது அவர்கள் சொன்ன டென்னிஸ், வேறு சின்ன விளையாட்டுக்களை விளையாடக் கூட வசதி இல்லை. இப்பொழுதிருக்கிற இடத்திலே கல்லும் முள்ளும் தான் நிறைந்திருக்கின்றன. ஆகவே, அவற்றைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, விளையாட வசதி அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மெரினாவுக்கு அருகிலேயே அழகான நீச்சல் குளம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாண்புமிகு இராசாராம் அவர்களும் அடிக்கடி அதைப் பயன்படுத்துவதாகக் கேள்விப் பட்டேன். அதைப்போல் மாண்புமிகு உறுப்பினர்களும் அதைப் பயன்படுத்தலாம்.

டென்னிஸ், கால் பந்து, போன்ற விளையாட்டு விளையாட மாண்புமிகு உறுப்பினர்கள் போதுமான அளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்று தெரிந்தால், அதற்கான வசதி இருந்தால் அமைக்க முயற்சி எடுக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, வாலிப வயதுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது வெளியே விளையாட வாய்ப்பிருக்கிறது. ஆனால், வயதான சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளே விளையாட 'இன்டோர் கேம்', விளையாட ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான வசதி இப்பொழுது இருக்கிறதா என்ற விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடத்திலே இல்லை. அதற்கு சட்டமன்ற விடுதிக்குள்ளே என்ன வசதிகளை ஏற்படுத்தலாம் என்று ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கலாம். அதற்கென்று ஹவுஸ் கமிட்டி இருக்கிறது. ஹவுஸ் கமிட்டி பரிந்துரை செய்யுமானால் அரசு அதைக் கவனிக்கும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஹவுஸ் கமிட்டி என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் ஆண்டிற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ கூட அது கூடுவதில்லை. ஆகவே அந்த ஹவுஸ் கமிட்டியை அடிக்கடி கூட்டுவதற்கு ஆவன செய்தால், இப்படிப் பட்ட யோசனைகளை அங்கத்தினர்கள் சொல்ல வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்விதான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஹவுஸ் கமிட்டி எப்பொழுது வேண்டுமானாலும் கூடலாம். அதனுடைய தலைவர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்தான். அதிலே இருக்கிற உறுப்பினர்கள், தலைவரிடத்திலே—அவரிடத்திலே—விண்ணப்பித்து அந்தக் கமிட்டியைக் கூட்டலாம். அவர்களின் பரிந்துரையை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், ஹவுஸ் கமிட்டியிலே நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள் பல அமுலுக்கு வாராமல் இருக்கின்றன. ஹவுஸ் கமிட்டி மற்ற பகுதிகளிலே எப்படி எப்படி வேலை செய்கிறது என்பதை அறிவதற்காக, வெளியூருக்குச் சென்று பார்வையிடுவதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி ஹவுஸ் கமிட்டியைப்பற்றியல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்ற ஹவுஸ் கமிட்டிகளை அங்கு போய்தான் பார்க்க வேண்டுமென்று அல்ல. அவைகளுடைய குறிப்புகளை வேண்டுமானாலும் வரவழைத்து ஹவுஸ் கமிட்டிக்குத் தரலாம். அவர்கள் அறிந்து தக்க முடிவை எடுக்கலாம்.'

திரு. நா. வீராசாமி : இப்பொழுது நாட்டிலே எம்.எல்.ஏ.க்கள் உட்கார்ந்தால் தப்பு, எழுந்தால் தப்பு என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் விளையாட ஏற்பாடு செய்தால், எம்.எல்.ஏ.-க்கள் மெட்ராசிலே விளையாடு கிறார்கள் என்று எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே, இதை மறு பரிசீலனை செய்து, கைவிட அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 'இன்டோர் கேம்ஸ்' என்று இருப்பது மிகமிக நல்லதுதான். இப்பொழுது அறைக்கு அறை வேறு விளையாட்டுகள் விளையாடுவதாகத்தான் கேள்விப்படுகிறோம். (சிரிப்பு). அவற்றிலிருந்து மாறி, இப்படிப்பட்ட நல்ல விளையாட்டுகளில் ஈடுபடுவது நல்லதுதான்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள்.

*105 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் உள்ள இராசா மிராசுதார் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம், பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : அவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலே தினம் தினம் கூட்டம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டம் அதிகரிக்காமல் இருப்பதற்கு கட்டிடங்களை விஸ்தரிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.